# விலைமனு கோரல்
# விவசாயம், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு
# இலங்கை நில அளவைத் திணைக்களம்
# 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க உரித்துப் பதிவுச் சட்டம் மற்றும் 2002 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க நில அளவைச் சட்டத்தின் கீழ் நில அளவீடுகளை மேற்கொண்டு கடத்திரள் வரைபடங்களைத் தயாரித்தல் – 2026
# விலை மனு இலக்கம் – SD/II/2026

1. இலங்கை நில அளவைத் திணைக்களம் சார்பாக நில அளவையாளர் நாயகத்தினால் 1998 ஆம் ஆண்டின் உரித்துப் பதிவுச் சட்டம் மற்றும் 2002 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க நில அளவைச் சட்டத்தின் கீழ் நில அளவீடுகளை மேற்கொண்டு இலக்காகக் கொண்ட 200 வலயங்களின் பணிச் சுமையை 2026 ஆம் ஆண்டில் நிறைவு செய்வதற்காக கொழும்பு, கம்பஹா, களுத்துறை, இரத்தினபுரி, கேகாலை, காலி, மாத்தறை, ஹம்பாந்தோட்டை, குருநாகலை, புத்தளம், கண்டி, மாத்தளை, நுவரெலியா, அநுராதபுரம், பொலன்னறுவை, மொனராகலை, யாழ்ப்பாணம், பதுளை, அம்பாறை மற்றும் மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களின் நில அளவீடுகளை முன்னெடுத்து கடத்திரள் வரைபடங்களைத் தயாரிப்பதற்கான விலை மனுக்களைச் சமர்ப்பிப்பதற்கு நாட்டிலுள்ள பதிவு செய்யப்பட்ட, உத்தரவுபெற்ற நில அளவையாளர்களுக்கு விடுக்கப்படுகின்ற அழைப்பாகும்.

2. விலை மனு கோருதல் தேசிய போட்டித்தன்மையான விலை மனு கோரல் நடைமுறைகளுக்கு அமைய முன்னெடுக்கப்படும்.

3. ஆர்வம் காட்டுகின்ற விலை மனுதாரர்களுக்கு விலைகள் கோரும் விலை மனுப் பத்திரம், பெறுகை நிபந்தனைகள் மற்றும் விவரக் குறிப்புகள் மற்றும் ஏனைய தொடர்புடைய ஆவணங்களை www.survey.gov.lk எனும் திணைக்கள வலைத்தளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்துகொள்ள முடியும்.

4. விலை மனுக்களை அனுப்பி வைக்கும் போது நாட்டின் மேற்குறிப்பிட்ட மாவட்டங்களுக்கு மீள செலுத்தப்படாத ரூ. 1000/= வீதம் நாட்டின் எந்தவொரு மாவட்ட நில அளவை அலுவலகம்/ மாகாண நில அளவையாளர் நாயகத்தின் அலுவலகம், தியத்தலாவை அளவையியலும் படமாக்கலும் நிறுவனம் அல்லது நில அளவைத் திணைக்களத்திற்கு அல்லது நிகழ்நிலை கட்டணம் செலுத்தல் முறையின் ஊடாக கட்டணம் செலுத்தி பெற்றுக் கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டின் பிரதி ஒன்று அதனுடன் இணைத்து அனுப்பப்படுதல் வேண்டும்.

5. குறித்த மாதிரிக்கு அமைய முறையாக பூரணப்படுத்தப்பட்ட விலை மனுக்கள் 2026-05-19 ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முதல் கிடைக்கக் கூடிய விதமாக பதிவுத் தபால் மூலம் அனுப்புவதற்கோ அல்லது பெறுகை மற்றும் வழங்கல் பிரிவில் உள்ள தொடர்புடைய டெண்டர் பெட்டியில் இடவோ முடியும். விலை மனுக்கள் உள்ளடங்கிய முத்திரையிடப்பட்ட உறையின் இடது பக்க மேல் மூலையில் "............................................. **மாவட்டத்தின் கடத்திரள் வரைபடம் தயாரிப்பதற்கான விலை மனுக்கள்"** எனக் குறிப்பிடுதல் வேண்டும். கிடைக்கப் பெறுகின்ற விலை மனுக்கள் அத்தினமே மு.ப. 10.05 இற்கு திறக்கப்படும்.

6. விலை மனுக்கள் அனுப்பி வைக்கப்பட வேண்டிய முகவரி சிரேஷ்ட நில அளவை அத்தியட்சகர் பெறுகை மற்றும் வழங்கல் பிரிவு, நில அளவையாளர் நாயகத்தின் திணைக்களம், இலக்கம் 150, பர்னார்ட் சொய்சா மாவத்தை, கொழும்பு 05.

7. தாமதமாகி கிடைக்கப் பெறுகின்ற விலை மனுக்கள் நிராகரிக்கப்படும்.

நில அளவையாளர் நாயகம்,
இலங்கை நில அளவைத் திணைக்களம்.
இலக்கம் 150,
பெர்னாட் சொய்சா மாவத்தை,
கொழும்பு 05.
2026-04-24